நாம் தேடியது இதுதான்

ஆத்ம ஞானம் அடையும் வழி

By,

இராமலிங்க[illegible] பிள்ளை
சி[illegible]னந்தி.

சிதம்பரம்
ஸ்ரீபாலாம்பிகா விலாச அச்சுக்கூடத்தில்
[illegible]கப்பட்டது.

ஓம்

தத் ஸத்.

ஸ்ரீரமண குரு பரமாத்மனே நம:

ஆத்ம ஞானம் அடையும் வழி.

HOW TO GET SOUL POWER.

அன்புடையீர்! அகிலத்திலுள்ள ஆன்மகோடிகளெல்லாம்அல்லும்பகலும் காற்றினு மதிவேகமாகக் கடிந்து செல்வதெல்லாம் இன்பத்தை நாடியே யல்லாது துன்பத்தை நாடியல்ல, என்றாலும் ஆறறிவுள்ள இம்மனிதப் பிறப்பிற்கு ஆக்கி அளித்து துரிசு நீக்குவிக்கும் சர்வலோக சரண்யனும் உரு அருவமாகியும், அனைத்தும் தாமேயாகியும், தாமல்லராகியும். தாக்கியும் தாக்கற்றும் அகத்தும் புறத்தும் எங்கும் நீக்கமின்றி நிறைந்து விளங்காநின்ற இயற்கை யுண்மைக் கடவுள்

மிக்க பகுத்தறி வொன்று அளித்திருக்கின்றமை யால் நாமுட்புகு மின்ப மெல்லாம் உண்மையுள்ள இன்பந்தானா? அத்தகைய இன்பம் இன்பமாகவே முடிகின்றதா? இன்பம் இன்பத்தையல்லவோ கொடுக்க வேண்டும். அஃது இன்பமென்று நாடியநமக்கு இணையில்லா வின்னல்களும், சஞ்சலங்களாகிய தீராப்பிணியும் ஓயாக் கவலையும் மாயாமயக்கத்தால் மனிதனை அந்தகாரத்தில் அழுத்திவிடுவதை ஆராயவேண்டாமோ? இம்மட்டோ ப்ரபஞ்ச மென்னும் சமுத்திரத்தில் விஷய சுகங்களென்னும் அலைகளினால் இந்திரியங்களென்னும் கரைகளில் தாக்கி சிதருண்டு சலித்துக் கொண்டிருக்கும் மனம் சுகர் நாய்போல் நெடுந்தூரம்சென்று ஆசையென்னும் பைசாச வலைக்குள் சிக்கி அல்லற் படுத்தி நிற்கும் மோஹமென்கிற அந்தக்காரண கருத்த யிருளில் ஊஞ்சலில் அஞ்சலாடும் தமது பரிவாரங்களாகிய இராக த்வேஷ காம க்ரோத லோப மோஹ மத மத்ஸர டம்ப தர்ப்ப ஈர்ஷை அஸூயை என்னும் ஆபாசக்களஞ்சிய ஆனந்தக் கோட்டான் கூட்டமானது, துர்க்கந்தமாகியமலத்

தைத்தின்று ஸந்தோஷிக்கும் பன்றியைப் போல், விஷய சுகங்களில் தாட்டீகமாய் விளையாடுமானந்தமான்ன ஆனந்தம், இவைகள் கூட்டிவிடுவது கூத்தனிடமோ அல்லது ஆத்ம ஞானத்திடமோ? ஸ்ரீகளின் ஆசையை விடாதவனுக்கு ஒருக்காலும் ஆத்ம ஞானம் கிட்டாது; அதாவது நாள்தோறும் ஆத்ம விசாரணைசெய்து ஸ்ரீகளின் ஆசையை மனதிலிருந்து அடியோடு நீக்கவேண்டும், காமிய கர்மங்களும் தான தர்மங்களும் மேலான ஜென்மத்தைக் கொடுக்குமே யல்லாது பிறவிப்பிணியை யொழிக்க வல்லதல்ல, இது ஆன்றோர் வாக்கு. பின் தன்னைத்தான் அறியின் ஞானம் லப்தமாகும். தன்னையறிந்தவன் தலைவனையுமறிவான், தன்னையறியும் அறிவே பேறறிவு. பின்னையறியும் அறிவெல்லாம் சிற்றறிவே. நாம் சொல்லுகிறபடி நடக்கிறதில்லை, நாம் பெண்களின் ஆசை கூடாதென்கிறோம் இருப்பதெல்லாம் பெண்களிடமே. பாலுள்ளதோலும் நாறும் கசுமாலக்கும்பி கவுட்டியிடுக்கும் கதிக்குவழி காட்டி விடுமோ? பெரும் வியாதியும் ஓயாக் கவலையும்

தானே கொடுக்கும். மனம் தாவி ஸ்தனத்தின்மேல்கை மேவி ஆண்டு மீண்டும் கையைப்பார்க எஞ்சி மிஞ்சியது ஒன்றையுங் காணும், இதுவும் ஓர்வகை மனப்பிராந்தியே, நாயானது எலும்பைக்கறண்டி அதிர்ச்சியால் தன்பல் ஈறிலிருந்து வரும் இரத்தத்தை சுவைத்து எலும்பிலிருந்து சுவை வருவதாக நினைப்பது போலும்; அங்ஙனம் அஞ்ஞான மையலினால் புண்ணை நண்ணுவோரின் மதிதானென்னே, திறந்தானென்னே, சுகந்தானென்னே? ஆழ்ந்து பாற்கில் அறிவு விளங்குமன்றே. ஆராயாவிடில் எத்தனையோ அஸங்கிய ஆபாசசேற்றிலுழலு நாம் கரை யேறுவதுதா னெங்ஙனே? ஆனதால் அனாதி காலம் தொட்டுஇன்றுமென்றுமுளதாகியும், தெவிட்டாத ஆனந்தாதீதமாகிய பேரானந்த பெருவாழ்வைப்பெற பேரின்பத்தை யனுபவிக்க ப்ரபஞ்சத்தை இந்திரியத்துள்ளடக்கி, இந்திரியத்தை மனதுள்ளடக்கி, மனதை ("நான் ,, என்னும் புத்தி உற்பத்தி ஸ்தானமாகிய) ஹிருதயத்திற்குள் ளடக்கி, ஹிருதயத்தை ஆத்மாவுள்ளடக்க ப்ரம்மாந்தரம்போ

ய்ச்சேரும் ஜீவாத்மாவை பரமாத்மாவுடன் இரண்ட றக்கலக்கச் செய்வதே ஆனந்தம். சித்—ஆபாசம் நீக்கி சித்—ஆகாஸ பெருவெளியிலிருப்பதே ஆனந்தம். இதுவே பசு, பதி, பாசம், என்று சொல்லப்படும். (அதாவது பசுஎன்றால் நாம். பதிஎன்றால் கடவுள், பாசம் என்றால் நமக்கும் கடவுளுக்கும் மத்தியிலிருக்குந்திரை இந்தத்திரையை யார் ஒருவர் நீக்கி விடுகிறார்களோ அவர்தான் பதி,) அதாவது பசு பதியாகி விடுவார்கள் இதுதான் பேரின்பநிலை. நாம் வெகு நாளாய் (ஜென்மம்ஜென்மமாய்) தேடிக்கொண்டு வருவது. மனதை அசையாமல்நிறுத்திஉள்ளதை உள்ளபடி ஒருகடிகையேனும்பேரின்ப பெருஞ்செல்வத்தை அனுபவித்த ஒருவன் மீட்டுமிவ்வுலக ஏலாபாசத்தில் சிக்காமல் தப்பித்து உடனே துறப்பான் என்பது நிச்சயம். இதுவும் எனது அனுபவமே. பலவாகிய வேதாந்த ஞான நூல்கள் வழிபைக்காட்டுமே யன்றி ஞானத்தைக் கொடா, மனமடங்கா, மனோ துன்பம் நீங்கா. அத்தகைய விரிவாகிய ஞான நூல்களை படிக்காமலும் ஞானம் பெற

லாம். (இதற்கு அத்தாக்ஷி;— ராமகிருஷ்ணபரமஹம்ஸதேவர், திருவண்ணாமலை ரமணமகர்ஷி) ஞானமோ சித்சத்தி. நினைவு ரூபமாயிருக்கும். ஞானம் சலித்தலே மனது என்கிறோம், பலவழிகளில் செல்லும் மனதை ஒருவழியில் நிறுத்தியபின் அவ்வழியிலும்செல்லவொட்டாமலடக்கினால் ஞானமாகிய சித் சத்தி தேங்கிப் பெருகும். எப்பொழுதேனும் அது சலித்தால்நினைவாகமாறி காரியமாகி நிறைவேறும், இப்படிப்பட்டமனதை அடக்கும் வழிகள் பலஉள;—

தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், மஹா பக்தவிஜயம், தாயுமானுர், பட்டினத்தடிகள், ஸ்ரீமத் இராமலிகஸ்வாமிகள் திருவருட்பா, திருப்புகழ், பகவற்கீதை இவைபோன்றவற்றை ஒழிந்த நேரமெல்லாம் ஏகாக்ரசித்தத்துடன் பாராயணஞ் செய்வது, அங்கம் பாவசமடைய் ஆனந்தக்கண்ணீர் ஆருப்ப் பெருக உருக்கமாய்ப்பாடுவது, இவைகளை விட மேலான தவமும் இ

யானமும் இல்லை. " ஓம் நமசிவாய " என்பது ஸ்தூல பஞ்சாக்ஷரம். " ஓம் சிவாயநம " என்பதுசூக்ஷமபஞ் சாக்ஷரம். " ஓம் நமோ நாராயணு " என்பது அஷ்டா க்ஷரம். ஓம், ஹம், ஹாம், சிவாயநம சிவ. சிவ. ராம் ராம், (அல்லது) ஓம். ஓம். காரணபஞ்சாக்ஷரமென் றும் மஹா காரண பஞ்சாக்ஷர மென்றும். முத்திப ஞ்சாக்ஷரமென்றும், (இருதலைக்கொள்ளி) இருதலைமா ணிக்கமென்றும் பரிபாஷை. இவைகளில் அவரவர்க ட்குரியதை எப்போதும் மானஸீகமாய்உச்சாடனம் செய்யலாம். பிராம்மணர்கட்கு காயத்ரி மந்திரமே சிலாக்யமானது. மானஸீக ஜெபம்அதிக அப்பியாச மானுல் அதுவே பிராணுயாம யோகத்தில் கொண்டு போய்விடும். இந்த தபசே போதும்.

" வாசி " என்னும் அக்ஷரத்தைமாறினல் " சிவா " ஒ ன்றிற்குள் ஒன்று மறைந்து கிடக்கின்றன (எரிவதை யிழுத்தால்கொதிப்பதுதானே நிற்கும்.) எவ்வழியினும் பெறலாமென்றாலும் முந்தியதைவிட பிந்தியதேகுரு

க்ருவழி, சுகானந்த அதீத வழி மனமெங்கில்லை வா யுவங்கில்லை ஸிலா வடிவம்போல் வடதிசை ஸ்தம்பம் போல் தலை மார்பு இடுப்பு செம்மைபெற செவ்வனே புருவ மத்திய நாட்டத்தில் தியானித்திருக்கவும் மன முறுதி பட்டால் சிவோஹம் பாவனைசெய்து மனதை சலிக்கவாவதுவேறு மனோ ராஜ்யங்கள் செய்யவாவது விடாமல் ஸாந்தமாயிருக்கப் பழகுவது மிக்க நன்மை யைக்கூட்டுவிக்கும். ஆமையைப்போல் நினைத்த மாத் திரத்தில் பஞ்சேந்திரியங்களை விஷயத்தினின்று மீட் பவனே ஞானி. அலையு மனத்தை ஆண்டவனிடம்லைப் புவிப்பதுதான் பெரியபக்தி (இவை எனது குருநா தர்வாக்கு.) அப்பியாசிகள் (சகுணோபாஸனை) கணபதி சுப்பிரமண்யர். உபாசிப்பது நல்லது. (நிற்குணோபா ஸனை) செய்ய சாத்திய மானால் ஆஹாஸத்தை தியா னித்து களங்கமில்லாமல் ஆத்மாவை அனுபவ சாக்ஷி ப் பிரமாண மாத்திரமாக வைத்து பஞ்ச கோசங்களை யுங்கடந்து அப்பால் சூன்யாவஸ்த்தையு மகற்றி ஆங் குதபமாகிற ப்ரம்மாகார விருத்தியின் வஸ்து நிச்சய

மாகிய அருட்பெருஞ் ஜோதிக்குள்ளிருக்கும் தனிப் பெருங்கருணை தெரிசனத்தை யடையவும். இதற்கு ஜீவகாருண்யந்தான் பத்தியம், பசித்திரு, தனித்திரு, விழித்திரு. இவைதான் விரதம். துரியபூமி யேழுங்கடந்த இத்தெரிசனத்தை கருணை மேலீட்டினால் தாமடைவது மாத்திரம் கூடாதென்று ஆன்மகோடிகளுய்யும்பொருட்டு நமது கருணை வள்ளல் ஸ்ரீமத் இராமலிங்க ஸ்வாமிகள் உத்தரஞான சித்திபுர சத்திய ஞான திருக்கோயிலில் கோலங்கொண்டெழுந்தருளினர். எல்லாவற்றிலும் த்வைத பாவனையை நீக்கி அத்வைதமாக நம்பிக்கை மனோதிடம் விடாமுயற்சி ஆத்ம விசாரணை இவைகளைக்கொண்டு நாம் நம்மை ஜனன மரணமற்ற (இறப்புப் பிறப்பற்ற) ஆத்மாவாக நினைக்கவேண்டும். அப்படியே நினைத்தாலும் போதாது அடிக்கடி பழகவேண்டும், அவ்வாறு பழகின் அதுவே நமது சொரூபத்தை யடைவதற்கு யேதுவாகும். நாம் எப்படி நினைக்கிறோமோ அப்படியே யாவோம். நினைத்ததைக் கொடுக்குந்தெய்வம் நம் மனத்திலிருக்கிறது

இதுவென் குருநாதர்வாக்கு நான் சொல்லுவதைமாத்திரம் நம்பவேண்டாம் வேண்டுமானால் சுருதி யுக்தி அனுபவம் முதலிய குரு முகத்தாலும் அறியுங்கள். உண்மையில் நான் என்னை என்னுடையது என்பவைகளே இவ்வளவு இன்னல் கட்குக் காரணமாகின்றன. ஸ்தூல தேஹமும் நாமல்ல கண். காது,மூக்கு, வாய்முதலியவைகளும் நாமல்ல, ஸூக்ஷ்ம திரேக்கருவிகளாகிய மனம் புத்தி சித்தம் அஹங்காரமும் நாமல்ல, பிராணனும் ஓர் தத்துவமேயன்றி வேறல்ல அதுவும் ஜடமே (நான் பிராணன் போனாலும் செய்யமாட்டேனென்கிறான்.) இதனாலேயே பிராணனும் நானல்ல. ஜாக்கிர ஸ்வப்பன ஸுஷுப்தியும் நானல்ல, (ஒருமனிதன் சொன்னதாவது ஐயா நான் ஸ்வப்பனத்தில் மறித்தேன். பின்னென்னைச் சிங்காரித்தெடுக்கும் போது விழித்துக்கொண்டேனென்றான் இதைக்கேட்டவனும் சரியான ஸ்வப்பனமென்றான், அதெப்படி? இவன் மறித்தது உண்மையானால் இவன்தன்னை யலங்கரித்ததை எப்படிக்கண்டான்,

அவ்வகைக் கண்ட துண்மையானால் செத்தது பொய்யாயிருக்கவேண்டும் ஆனால் அவன் கண்டஸ்வப்பனமோ உண்மை இவன் கண்ட ஸ்வப்பனத்திற்கு எவர் சாக்ஷியோ அவர்தான் ஆத்மா. ஸுஷுப்தியில் நான் சுகமாய்த் தூங்கினதை எவர் கண்டாரோ அவர்தான் ஆத்மா. அந்த ஆத்மாதான்நீ. நீதான் கடவுள் நீமனமென்னும் மாயாஜால மகேந்திர கோலாகால கோல படுக்காளிப்பயல் வசமானபடியினால் வேறுபெயருடன் விளங்குகிறாய் இம்மனத்தின் மூலமாகவே உன்னைநீ அறியவேண்டுமானால் ஒருக்காலும் காட்டவேமாட்டான்- அப்படிப்போனாலும் காட்டுவதாகவே அழைத்துப்போய் அல்லற்ப்படுத்தி விடுவான்இவனை நீவேறுபடுத்தினால் தான் உன்னை நீஅறியலாம். திருடர்களைக்கொண்டு திருடனைக் கண்டுபிடிக்க முடியுமா? காட்டிக் கொடுக்க மாட்டான். ரஜோ, தமோ, குணங்களிருக்கு மிடத்து மனம் விளங்கும், சுத்த ஸாத்வீக குணமிருக்கு மிடத்து ஆத்மா விளங்கும். (குருசொல்லுதல்) ஹோ சிடனே ஒன்று மாத்திரம் மறக்காதே

அதாவது குருபக்தி. குருவார்த்தை, ஞாபகமிருக்க வும் மிஞ்சி உள்ளதுதான் ஆத்மா." தத்வ மஸி " (தத் அதுதுவம்—நீ. அஸி—ஆயிருக்கிறாய்.) அது நீயாயிரு க்கிறாய். இதுதான் வேதத்தின் முடிவு. இப்பொழு துஉன்னையும் உலகத்தையு மறிந்தபடியினால் தலைவனா யாகிவிட்டாய் நீயே ப்ரம்ம ஸ்வரூபி. எங்கும் ப்ரம்ம மயமே. இதுதான் வஸ்து நிச்சயம், அது நீ என்னு ம்அதீதப் பட்டவனாய் விட்டாய். மணிகள் தோறும் சரடு அனு சூதமாயிருப்பதுபோல ஜீவர்கள் தோறும் ஆன்மாவாகிய நீ கலந்திருக்கின்றமையால் யாவையும் யாரையும் உயர்வு தாழ்வில்லாமல் சமநோக்காய் நோ க்கும் திறனுள்ளவனாய். (முடிவில்மௌனமே.)

கூறியது கூறல் என்னும் குற்றத்திற்காளாகாமல் விகசிதமாக வெள்ளிடைமலைபோல் தெள்ளிதின்விள ங்கி உன்மனம் திடப்பட இன்னு மொருமுறை கூறி முடிக்கின்றேன். " நான்—யார். நான்—யார். " என்றும் " வந்தவேலை—என்ன. " வென்றும் ஆத்மாஅனாத்மா

விசாரணைதான் ஆதாரணைக்கருவி, மனத்தை வேலை செய்ய விடாமல் ஒடுக்கத்தில் விட விட ஆத்மஞான ப்ரகாஸமுண்டாகும். நானென்று நாடித்துவருவதுதான்மனம். ஒன்றும் நினையாமல் சும்மாவிருப்பதுதான் ஞானவழி. (உலகோரிதை சூன்யமென்று சொன்னாலும் ஆன்ம ப்ரகாஸ மென்றாலும் ஒன்றே.) இது என்குருநாதர் வாக்கு, யாதொருவிஷயத்தையும் பற்ற விடாமல் சங்கல்பம் பண்ணும் வறுவாசனைகளைக்குறைத்து பழக்கும் பழக்கத்தினாலும் எழும்பும் நினைவுகளை நசுக்கிக் கொண்டிருப்பதனாலும், மனதை அடக்கினால் சாமான்ய மாக அடங்கும். வேறு வழியிலடக்கின் மீண்டும் வளரும். பழக்கமே காரணம் அனுபோகத்தில் சுலபம் இதைப்படித்த மாத்திரத்தில்ஞானம் நமக்கு வந்துவிட்டதாக நினைப்பது கூடாது முறைப்படி அடக்கில் சாமான்யமாக அடங்கும்:—

மனமென்னும் மாடடங்கில் தாண்டவக் கோனே
முத்தி வாய்த்ததென்றெண்ணடா தாண்டவக்கோனே.

(இடைக்காட்டு சித்தர்.)

" காகமுறவு கலந்துண்ணக்கண்டீர் " தாயுமானர்.

என்குரு அனுக்கிரஹத்தினல் நானென்பதுமேலி டாமல் சிற்றின்பத்தைக் காட்டிலும், அளவிறந்த அ ளவு வாசாமகோசரமாயும், சொல்லொணு தாயும் ஆனந்தாதீதமாயும், செம்பழம் பொருளாயுமுள்ள பே ரானந்தப் பெருவாழ்வில் கலந்து கலந்தும், இனித் து இனித்தும். தனித்து தனித்தும். தூங்காமல் தூங் குவதிலு முழுகுகின்றபடியினல். இச்சுகானந்தத்தை அடிமை மாத்திரம் அருந்துதல் நீதியோ? சமனேக் கையும் ஜீவகாருண்யத்தையும் உத்தேசித்து நான்என் பது மேலிடாமல் சிற்றறிவுடைய மலக்கிருமியிற்கடை யேன் இரக்கத்தினல் இப்படிச் செய்யவேண்டியது என்கடமைகளி லொன்ருன படியினல் தோன்ருத் துணையாயிருந்து தோற்றுவித்த திருவருட் ப்ரகாஸ வள்ளல் மஹான் ஸ்ரீஇராமலிங்க சற்குருவிற்கும்தோ ன்றும் துணையாயிருந்து அனுக்கிரஹித்த திருவண் ணமலை என்குரு மஹான் ஸ்ரீரமணமஹரிஷி அவர்

கட்கும் பக்தி பூர்வமாக மிகவும் அன்போடு அவர்களது பாத பத்மங்களில் இக்ரந்தத்தை ஸமர்ப்பித்துள்ளேன். இதிலுள்ள குற்றத்திற்கு பொறுப்பாளி நானல்ல இதை நான் குற்றத்துட னெழுதியதாக உங்கட்குத் தோற்றினாலும் அந்த நான் நானல்ல.

ஏகமயச் சொரூபன்.

" சிவன் எவன் அவன் இவன் இவன் சிவன் அவன் எவன்?',

சாந்தி! சாந்தி!! சாந்தி!!! சாந்தி.!!!!

ஓம் தத் ஸத்.

இராமலிங்கம் பிள்ளை.

சுத்த அத்வைத சிவ ஆனந்தி,

பின்னலூர்.

ஓம். தத் ஸத்.

திருவண்ணாமலை ஸ்ரீரமண ஸ்வாமிகள் மீது
திருவடிப்புகழ்ச்சி விருத்தம்.

கருணைமணம் கந்திக்கும் கமலத்தே யினிக்கும் கதிக்கு
வழி காட்டிவிடும் வேதமணம் நாறும், பொருணிறைந்த சிவ
யோக மணம்வீசும் ஞானம் பொங்கிவரும் வேதாந்த
மணங்கமழும் பொல்லா, மருணீக்கு மாமலராம் மோன
மணம் மணக்கும் மதிபெருக்கும் சித்தாந்த மணம்பரிம
ளிக்கும் அருணைவாழ் ரமணகுரு ஆனந்த மருளும் அவதார
அண்ணலடி அருமலரி னிடத்தே,

தகரவொற்று தலைமைபெற துப்புண்டு, தேடாமல் தேடி
வரும் தீனருக்குத் தத்வமஸி தானே யாகும்,
தகரவொற்று தருவோங்கு திகிரியென தலைமையென
ததிதியென திதிதியென தாண்டிவரும், தனித்துவரும்.
தகரவொற்று மேல்நாலைந்து தொலைத்ததினால் பாய்மனமும்
தூய்மனமாய் திரும்பிவிடும் தெரிந்துவிடும் தன்னிலமையும்
தகரவொற்று தத்பதமும் த்வம்பதமும் அஸிபதமும் நீயாகத்
தனித்திருந்து தந்திரத்தால் தேடிக்கொள்ளே.

தகர:—இருதயம், பூமி, ஓர் தனியெழுத்து, யானை. விட. இவை
ஒருபொருள் விளக்கம்.

☞ இராமலிங்கம் பிள்ளை.
சிவ ஆனந்தி.

